DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.94/2025**

Prosecution witness **PW.5 (LW.6)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Balasubramaniam | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused present. Accused counsel not present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **04.03.2026**

04.03.2026 முதல் விசாரணை :

1. நான் குன்னூர் தூதூர்மட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில் 2வதாக கண்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2. கடந்த 09.05.2025ம் தேதி காலை சுமார் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாக தூதூர்மட்டத்திலிருந்து நானும் நண்பர் ராமகிருஷ்ணனும் எனது இருசக்கர வாகனத்தில் குன்னூர் நோக்கி வந்து கொண்டிருந்த போது ஒத்தவீடு அருகே கொலக்கொம்பை போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களிடம் நாங்கள் சென்று என்ன என்று விசாரித்த போது 04.05.2025ம் தேதி மோதிலால் என்பவரை பைக்கில் வந்து ஒருவர் இடிப்பது போல் சென்று கல்லைக்கொண்டு தாக்கியதாகவும், அந்த வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு வந்திருப்பதாக சொன்னார்கள்.

3. போலிசார் அந்த இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் நண்பர் ராமகிருஷ்ணனும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும்**) சிறிது நேரம் கழித்து சம்பவயிடத்திலிருந்த மதிவாணன் என்பவர் அடையாளம் காட்டிய கைக்கு அடக்கமான கருங்கல்

ஒன்றினை போலிசார் கைப்பற்றுதல்மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். அதிலும் நானும் நண்பர் ராமகிருஷ்ணனும் சாட்சி கையொப்பம் செய்தோம். (**அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆகும்**) என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கல் தான் அது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.03.04 23:08:37 -0300

JUDICIAL MAGISTRATE,
COONOOR.